NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p5
**Date:** 6 January 2016

# அனுபவக் கல்விக்காக சாகசப் பயணம்

சுதாஸகி ராமன்




எம்.கணேஷ் குமார் (இடது) சிங்கப்பூரிலிருந்து தாய்லாந்தின் புக்கெட் வரை நண்பன் டேரன் பூனுடன் மோட்டார்சைக்கிளில் சாகசப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளார். **படம்: எம்.கணேஷ் குமார்**

மோட்டார்சைக்கிள் ஓட்டுவதற்கான உரிமம் பெற்றதிலிருந்து தாய்லாந்தின் புக்கெட்டுக்கு அதை ஓட்டிச் செல்ல வேண்டுமென மிகவும் விருப்பம் கொண்டிருந்தார் எம். கணேஷ் குமார். தம்மைப்போல் நோக்கமுடையவரைச் சந்தித்து, அவரோடு சேர்ந்து தமது கனவை நிறைவேற்றியுள்ளார் அவர்.

கடந்த மாதம் 15ஆம் தேதி முதல் எட்டு நாட்களுக்கு அவரும் அவரது தோழன் டேரன் பூனும் தங்களது ‘ஹோண்டா’ மோட்டார் சைக்கிள்களில் புக்கெட் வரை சென்று திரும்பினர்.

பகல் நேரங்களில் மோட்டார்சைக்கிள்களை ஓட்டிச் சென்ற இருவரும் இரவு நேரங்களில் இளைப்பாறி, அடுத்த நாள் காலை பயணத்தை மீண்டும் தொடர்ந்தனர்.

புக்கெட்டுக்குச் செல்லும்போது மலேசியாவின் பினாங்கிலும் தாய்லாந்தின் கிராபியிலும் இரு இரவுகளை அவர்கள் ஓய்வாகக் கழித்தனர்.

“செல்லும் வழியில் உள்ள பிரபலமான இடங்களைச் சுற்றிப் பார்த்தல், உள்ளூர்வாசிகளோடு உரையாடுதல், உள்ளூர் உணவுகளை ருசித்தல், அடுத்த இடத்திற்குச் செல்லும் வழிகளை ஆராய்தல், தங்குவதற்கான விடுதிகளை முன்பதிவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் இரவு நேரங்களில் ஈடுபட்டோம்,” என்றார் கணேஷ், 23.

மொத்தம் 3313 கி.மீ. தூரம் பயணம் செய்த இருவரும் திட்டப்படி செயல்படுத்த தினமும் சுமார் எட்டு முதல் ஒன்பது மணி நேரம் வரை மோட்டார்சைக்கிள் ஓட்டினர்.

நீண்ட தூர மோட்டார்சைக்கிள் பயணத்தை முதல் முறையாக மேற்கொண்டதால் போதுமான ஓய்வின்றி சோர்வு ஏற்பட்டதாகவும் புத்துணர்ச்சி பெறுவதற்கு நேரம் எடுத்துக்கொண்டதாகவும் கூறினார் கணேஷ்.

சோர்வு காரணமாக, சில சமயங்களில் வாகனம் ஓட்டும்போதே தூங்க ஆரம்பித்த கணேஷ் விபத்துகளில் சிக்கிக் கொள்ளும் ஆபத்துகளும் இருந்தன. இருந்தாலும், காப்பி, ‘ரெட்புல்’ போன்றவற்றைக் குடித்து முனைப்புடன் வாகனத்தை ஓட்டினார் கணேஷ்.

அத்துடன், மழையும் அவர்களுக்குச் சவாலாக இருந்தது. மழைக் கோட்டுகளை அவர்கள் உடுத்திக்கொண்டாலும் கனமழை காரணமாகத் தெளிவாகப் பார்க்க முடியாததால் மெதுவாக ஓட்டிச் செல்ல வேண்டியதாயிற்று.

பயணத்திற்கு முன்பாகவே கைப்பேசியில் ‘கூகல் மேப்ஸ்’, ‘சிஜிக்’ செயலிகளை பதிவிறக்கம் செய்த கணேஷ், அவற்றின் வழிகாட்டுதல்களுடன் மலேசியா, தாய்லாந்து நாடுகளின் நெடுஞ்சாலைகளில் பயணம் மேற்கொண்டார்.

“மற்ற வாகனமோட்டிகளின் போக்குகளைக் கவனித்தும் ஆபத்துகளைக் கணித்தும் அவற்றிற்கு ஏற்றாற்போல் வாகனம் ஓட்டக் கற்றுக்கொண்டேன். மேலும், துரிதமாக ஓட்டப் பழகிக்கொண்டதால், எந்தச் சூழலிலும் மோட்டார்சைக்கிளைச் செலுத்துவதில் எனக்கு இப்போது நம்பிக்கை பிறந்துள்ளது,” என்றார் அவர்.

கணேஷின் நலனும் பாதுகாப்பும் கருதி சாகசப் பயணத்தில் பங்கேற்கவேண்டாம் என்று அவரது தாயார் கோரினாலும் அச்சப்படாமல் சாதிக்க விரும்பினார் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் உயிர் அறிவியல் துறையின் மூன்றாமாண்டு மாணவரான கணேஷ்.

“வரம்புகளைத் தாண்டி துணிவாகச் செயல்பட நான் தயாராக இருந்தேன். சரியான முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டு, திட்டமிட்டுச் செயல்பட்டால் எதையும் சாதித்துவிடலாம் என்பதை இப்பயணத்தின் மூலம் அறிந்துகொண்டேன்,” என்று அவர் பகிர்ந்துகொண்டார்.

எதிர்காலத்தில் தமது மோட்டார்சைக்கிளில் லண்டன் வரை செல்லத் திட்டம் வைத்திருக்கும் அவர், அப்பயணத்திற்கான முன்னோட்டமாக இந்தப் பயணம் அமைந்ததாகக் கூறினார்.

தமது அடுத்த பயணங்களின் வழியாக அறநிறுவனங்களுக்கு நிதி திரட்ட முடிவு செய்துள்ள கணேஷ், அதற்கான மோட்டார்சைக்கிளோட்டிகளை ஒன்று சேர்க்கும் முயற்சிகளில் தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்.

> “மற்ற வாகனமோட்டிகளின் போக்குகளைக் கவனித்தும் ஆபத்துகளைக் கணித்தும் அவற்றிற்கு ஏற்றாற்போல் வாகனம் ஓட்டுவதைக் கற்றுக்கொண்டேன்.
>
> **மோட்டார்சைக்கிளில் சாகசப் பயணம் மேற்கொண்ட கணேஷ் குமார்**

## முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

- பயணத்துக்கு முன்பாக மோட்டார்சைக்கிளைப் பராமரித்தல்
- பயணத்தின்போது வாகனத்தை அடிக்கடி சரிபார்த்தல்
- மசகெண்ணெய், குளிரூட்டிகளைச் சேகரித்தல்
- பயணத்துக்கு ஏற்ற உடைகள், ‘கோப்ரோ’ கேமரா, தலைக்கவசம், காலணிகள் போன்றவற்றை வாங்குதல்
- கைபேசிக்கு தொடர்ந்து மின்னூட்டத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் (மோட்டார்சைக்கிளின் மின்னூட்டியுடன் கம்பி வழியாகக் கைபேசியை இணைத்து கைபேசியை மோட்டார்சைக்கிளின் கைப்பிடிக்கு அருகே பொருத்திக்கொண்டார் கணேஷ்)

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.